# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

*************

முறையீட்டு மனு எண்: 1179/2016/ந

ஆணை எண்: 050/2017

நாள்: 25/03/2017

| | |
|---|---|
| 23.11.2016 நாளைய "தினமலர்" நாளிதழ் செய்தி | முறைமன்ற நடுவத்தால் தாமாக முறையீடாகப் பதிவு செய்யப்பட்டது |
| நகராட்சி ஆணையர்,<br>திருவள்ளூர் நகராட்சி. | - எதிர் மனுதாரர் |

## ஆணை:

23.11.2016 நாளைய தினமலர் நாளிதழில் "அனுமதியின்றி குடிநீர் இணைப்பு நகராட்சிக்கு வருவாய் இழப்பு" எனும் குறுந்தலைப்பில் திருவள்ளூர் நகராட்சி குறித்து வரப்பெற்ற செய்தியினை பிரிவு 7ன்படி 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முறையீடாகப் பதிவு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை அசல் மனு எண்.1179/16/ந நாள்:24.11.2016ல் மேற்படி பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பான உண்மை நிலை மற்றும்

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தான அறிக்கையினை வார்டு வாரியாக அனுமதிக்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை, பெறப்பட்ட வைப்புத் தொகை மற்றும் அனுமதியற்ற இணைப்புகளின் எண்ணிக்கை, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகிய விவரங்களுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்திடுமாறு திருவள்ளூர் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.3784/2016/இ2, நாள்:02.12.2016, 09.12.2016 அன்று வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் திருவள்ளூர் நகராட்சியில் மொத்தமுள்ள 27 வார்டுகளில் 4060 வீட்டு உபயோக மற்றும் வணிக உபயோக குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புகளுக்கு ரூ.5000/-ம் வணிக உபயோகத்திற்கு ரூ.8000/-ம் மற்றும் தொழிற்சாலை இணைப்புகளுக்கென ரூ.10,000/-ம் என வைப்புத்தொகை நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்படுவதாகவும் இதுவரை மொத்தம் ரூ.60,07,000/- வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் தொடர்பாக அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளதெனவும், வார்டு வாரியாக ஆய்வு செய்ய குழுக்கள் நியமிக்கப்பட்டு தல ஆய்வுகள் நடைபெற்று வருவதாகவும், தல ஆய்வுகளை முழுமையாக முடித்து முறையற்ற இணைப்புகளை கண்டறிந்து முறைபடுத்திட கால அவகாசம் கோரப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை அ.ம.எண். 1179/16/ந நாள்:22.12.2016ன்படி கால அவகாசம் அளிக்கப்பட்டு 5.01.2017க்குள் முழு வடிவிலான இறுதி அறிக்கையினை அனுப்பி வைத்திடுமாறு ஆணையிடப்பட்டது. திருவள்ளூர் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.3784/2016/இ2, நாள்:06.01.2017, 12.01.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் முறையற்ற பொதுக்குழாய்கள் மற்றும் அனுமதியற்ற

வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்புகள் குறித்து கணக்கெடுக்க கள ஆய்வு பணிகள் நடைபெறுவதாகவும், முறையற்ற குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்துதல், புதிய குடிநீர் இணைப்புகள் பெறல் குறித்து அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நாள் வரை 59 முறையற்ற/தேவையற்ற பொதுக் குழாய்கள் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிடப்பட்ட 23வது வார்டில் அநேக வீடுகள் புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்டு நீண்ட நாட்களாக குடியிருந்து வருவதால் அவைகளுக்கு சொத்து வரியோ, குடிநீர் கட்டணமோ வசூல் செய்ய இயலாத நிலை உள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பகுதியில் பல இடங்களில் ஒரே தெருவிற்குள் பல பொது குழாய்கள் இருப்பதால், குடியிருப்பவர்கள் அக்குழாய்களிலிருந்து நேரடியாக இரப்பர் குழாய்களை மாட்டி வீட்டிற்குள் குடிநீரை பெற்று உபயோகிக்கின்றனரெனவும் இவ்வாறான பொதுக் குழாய்களையும் படிப்படியாக குறைத்திட நகராட்சியால் நடவடிக்கை தொடரப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும், 04.02.2017 நாளைய தினமலர் நாளிதழ் செய்தியில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் குறித்து திருவள்ளூர் நகராட்சியால் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து செய்திகள் வெளிவந்துள்ளதும் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. நகராட்சி ஆணையரது கள ஆய்வு அறிக்கையில் மொத்தம் 62 தேவையற்ற/முறையற்ற பொதுக் குழாய் இணைப்புகளும் 6 முறையற்ற வீட்டு குடிநீர் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், திருவள்ளூர் நகராட்சியின் 27.1.2017 நாளைய நகர்மன்ற கூட்ட தீர்மான எண்.35ல் நகராட்சி நிதி நிலையினை மேம்படுத்திட புறம்போக்கு இடங்களில் அமைந்துள்ள வீடுகளுக்கு/கடைகளுக்கு சில நிபந்தனைகளின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணைய அறிவுரைகளின்படி சொத்துவரி விதிப்பு செய்து பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கிட தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதும் ஆவணங்களின் அடிப்படையில் தெரிய

வந்துள்ளது. மேலும், கள ஆய்வு மற்றும் நடவடிக்கைகள் குறித்து புகைப்படங்களும் ஆதாரங்களாக இம்முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், இம்முறைமன்ற நடுவ அறிவுறுத்தலுக்குப் பின்னரே கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முறையற்ற மற்றும் அனுமதியற்ற சில குடிநீர் இணைப்புகள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. இந்நிலையினை தவிர்த்து தொடர் கண்காணிப்பு மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுவதோடு நகராட்சியின் வருவாய் குறித்து கவனம் செலுத்தாமலும், முறையற்ற இணைப்புகள் ஏற்படுத்திட அல்லது முறையாக கண்காணித்திடத் தவறிய பணியாளர்கள்/அலுவலர்களிடம் உரிய விளக்கங்கள் பெறப்பட்டு பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு வெளியிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017
செயலாளர்.

7.4.17
7/4/17

பெறுநர்:
நகராட்சி ஆணையர்,
திருவள்ளூர் நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம் - 602 001.

நகல்:
1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   செங்கற்பட்டு மண்டலம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.